**வத்தேகம நகர சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 23 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் வத்தேகம நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்கு சொந்தமான ரூபா 3,425,000 பெறுமதியான பெகோ இயந்திரத்தை கணக்கீடு செய்திருக்காததுடன், பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 221,570 பெறுமதியான 03 வாகனங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்வரும் ஆண்டில் சீர்செய்வதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 2007 முதல் 2010 வரை முற்கொடுப்பனவுனளின் கூட்டுத் தொகை ரூபா 563,628 இனை தொடர்புடைய கணக்குகளில் சீராக்கியிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப்பணத்தை பிரதான செயலாளரிற்கு அறிவித்து மீள் நரப்ப கோரப்பட்டுள்ளது. |
| (iii) | தளபாட உபகரணங்கள் ரூபா 175,230 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 நிதிக் கூற்றுக்களினூடாக சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கூட்டுத் தொகை ரூபா 2,518,738 ஆன 02 கணக்கு மீதிகள் மற்றும் துணைப்பதிவேட்டில் காட்டப்படும் மீதிகளிடையில் ரூபா 363,967 வித்தியாசம் ஆனது. | தொடர்புடைய மீதிகளின் வித்தியாசத்திற்கான சீராக்கம் செய்யப்பட வேண்டும். | 2019 நிதிக் கூற்றுக்களினூடாக சீர்செய்கிறேன். |

**(இ) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளிற்கும் மேலாக ரூபா 2,061,703 பெற வேண்டிய மீதியானது. | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 521,326 வை மீள்நிரப்பவும், ரூபா 1,452,025 வை கண்டறிய முடியாமையினால் அது தொடர்கான முன் நடவடிக்கைகளுக்காக சபைக்கு சமர்பிக்கவும், ரூபா 381,014 ஆன நீதிமன்ற தண்டப்பணத்தை பதிவலிக்கவும் மற்றும் மீதியை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,467,274 பெறுமதியான 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக எழுத்து மூல சான்றுகள் சமர்பிக்கப்படாததனால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு மீதிளை உறுதிப்படுத்தும் சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டும். | எடுத்து மூல சான்றுகளை கண்டறிய முடியாததால் பதிவலிக்க எதிர்வரும் மகாசபைக்கு சமர்பித்து தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 13,212,819 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 12,642,099 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 15,284,500 | 16,807,420 | 11,687,897 | 5,119,523 | 15,316,050 | 15,927,065 | 11,814,985 | 4,112,080 |
| (ii) | வாடகை | 6,162,400 | 5,262,080 | 5,022,080 | 239,809 | 4,573,700 | 4,142,965 | 4,266,570 | (123,605) |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,021,000 | 1,011,150 | 1,006,150 | 5,000 | 700,000 | 766,220 | 765,220 | 1,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,154,500 | 2,613,700 | 2,613,700 | 2,000,000 | 1,988,500 | 2,341,480 | 2,341,480 | - |
| | | 24,622,400 | 25,694,350 | 20,329,827 | 7,364,332 | 22,578,250 | 23,177,730 | 19,188,255 | 3,989,475 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தளின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் சேர்க்கப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 29,683,825 ஆன போதும், ஆண்டினுள் சேர்க்கப்பட்ட வருமானம் ரூபா 20,329,827 ஆனமையால் வரமானம் சேகரிப்பதன் முன்னேற்றம் 68 சதவீதமானது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக்கொள்கிறேன். |

**2.2.3 நீதிமன்ற தண்டப ்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,081,014 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,700,000 தொகை ஆனது. | குறித்த பணத்தை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணத்தில் ரூபா 27,000 அறவிட்ப்பட்டுள்ளதுடன், ரூபா 381,014 இனை பதிவலிக்க மகாசபை தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளதுடன் முத்திரைக் கட்டணத்தில் ரூபா 1,007,390 கிடைத்துள்ளது. |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **துணைச் சட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை கட்டளை சட்டத்தின் 157 பிரிவின் கீழ் 15 பிரதான விடயங்களை செய்வதற்காக துணைச் சட்டம் விதிக்கபட வேண்டிய போதும் 08 விடயங்களிற்கு மாத்திரம் துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு வருமானத்தை ஈட்டிக் கொள்ளக் கூடிய துணைச் சட்டத்தை விதித்து வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | துணைச்சட்டம் தொடர்பாக மகாசபையை அறிவூட்டி அங்கீகாரத்தின் பின் தயாரிப்பதாக அறிவிக்கிறேன். |

(ஆ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆண்டில் இவ் வேலைத் திட்டத்தை செயற்படுத்தியதுடன், அவ் வேலைத்திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் வழங்கல் மற்றும் கொம்போஸ்ட் பாத்திரங்கள் வழங்கல் மேற் கொள்ளப்பட்டது. |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார கணக்கில் காணப்படும் ரூபா 1,211,182 தொகையை அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அபிவிருத்தி வேலைகளுக்காக செலவிட வேண்டும். | வத்தேகம நதர அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் சிறுவர் வூங்கா, பொது வாகனத் தரிப்பிடம் மற்றும் வாராந்த சந்தை நிர்மாண கருத்திட்டத்திற்காக இப்பணத்தை ஈடுபடுத்த எதிர்பார்க்கிறேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 ஆளணி பதவிகளில் 09 ஊழியர் வெற்றிடங்கள் ஆனது. | வெற்றிடங்கள் நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். | ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (ஆ) | இடம் மாறிச் சென்ற 05 அலுவலர்களிடம் அறவிடப்படாத ரூபா 558,621 ஆன கடன் மீதி நிலவியது. | ஊழியர் கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். | சில கடன் மீதிகள் தவணை அடிப்படையில் அறவிடப்படுவதுடன் , மீதியை மீள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

**3.4 சொத்துக்கள் முகாமை**

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பபை உறுதிப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நுவரதென்னவெல எனும் காணியின் 01 ஏக்கர் 02 ரூட் 37.22 பசர்ஸ் அளவில் 17 நபர்களும் மற்றும் தெல்கஹலந்த எனும் காணியின் 03 ஏக்கர் 02 ரூட் 30 பசர்ஸ் அளவில் 30 நபர்களும் அனுமதியின்றி பயன்படுத்திக் கொணடிருந்த போதும், இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 17 அனுமதியற்ற வதிவாளர்கள் தொடர்பாக மகா சபைக்கு சமர்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன், மகா சபை தீர்மானத்தின் படி முன் நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.4.2 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 333,700 பெறுமதியான தச்சு இயந்திரம் மற்றும் ரூபா 129,500 பெறுமதியான மின் பிறப்பாக்கி இயந்திரம் விளைவற்று நிலவியது. | பழுதுபார்த்து பயன்படுத்த அல்லது பராதீனம் செய்ய வேண்டும். | மின் பிறப்பாக்கி இயந்திரம் 04 இல் 03 இனை பயன்படுத்துவதுடன், கிலோவெட் 10 இயந்திரத்தை விற்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

### 3.5 பெறுகைகள்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை ஒதுக்கீட்டின் மூலம 2018 ஆண்டில் நகர சபை மண்டபத்தை பழுதுபார்ப்பதற்கு ரூபா 1,568,990 ஆன பொறுப்பிற்கு ஒப்பந்தக்காரர் ஒருவருடன் கைச்சாத்திட்டு வேலைகளை வூர்த்தி செய்து 1,525,268 செலுத்தப்பட்டிருந்தது. பெறுகை அறிவித்தல் சபை அறிவித்தல் பலகையில் மாத்திரம் வெளியிட்டு ஒப்பந்தக் காரரை தெரிவு செய்திருந்ததுடன், சபை செயலாளர் மாத்திரம் டென்டரை திறந்திருந்தார். தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழுவிற்கு தொடர்புடைய நிபுணர் ஒருவரை சம்பந்தப்படுத்திக் கொள்ளாததுடன், முற்றலில்லாத மரக்கம்புகளை பயன்படுத்தி சபை அரங்கை தயாரித்ததனால், 2019 ஏப்ரல் 09 திகதி பரிசீலனை சந்தர்ப்பத்தில் சபை மேசையின் பலகைகள் விலகியிருந்தன. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை பின்பற்ற வேண்டும். | டென்டர் கோரப்பட்டிருந்தது பிரதேச மட்டத்திளேயே. சபை அதிகார பிரதேசம் மிக சிறியதாகையால் 04 இடங்களில் மாத்திரம் அறிவித்தல் ஒட்டப்பட்டது. டென்டரை திறக்கும் போது சபை செயலாளர் மாத்திரம் கையொப்பம் இட்டிருந்தார். தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழுவிற்கு தொடர்புடைய நிபுணர் ஒருவரை சம்பந்தப்படுத்திக் கொள்ளாததுடன், அதிக வெப்பம் காரணமாக சபை மேசையின் பலகைகள் விலகியிருந்ததாக அறிவிக்கிறேன். |